பேரறிஞர் அண்ணா 118வது பிறந்த நாள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கின்றார்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2026 அன்று காலை 9.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

கழக முன்னாள் அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நே.சிற்றரசு

நாள்: 10.09.2026

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்களை கனிமொழி கருணாநிதி எம்.பி. சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார்.

சட்டமன்றத்தில் முதல்வரின் ஆணவப் பேச்சு:

சென்னை தெற்கு - தென் கிழக்கு - மேற்கு மாவட்டங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன் – த.வேலு – நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, செப்.11- சென்னைத் தெற்கு - சென்னை தென்கிழக்கு - சென்னை மேற்கு மாவட்டக் கழகங்களின் சார்பில் நாளை 12.09.2026 சனிக்கிழமை அன்று காலை 10 மணியளவில், சைதாப் பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என்று மாவட்ட கழகச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு - நே.சிற்றரசு ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளதாவது:

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை இந்த நாட்டை ஆண்ட

முதலமைச்சர் தலைவர் கலைஞரையும் இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலைநாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறனையும், திருமணம் ஆன ஐந்தே மாதத்தில், 23 வயதில் MISA (Maintenance of Internal Security Act) அவசர நிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்த தியாகத்தைச் செய்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடிகர் விஜய் உடல் சைகையுடன் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்துக்குரியது. சட்டமன்ற வரலாற்றிலேயே இதுபோன்ற அருவெறுப்பான உரையை யாரும் கண்டதில்லை என்பது வரலாறு.

திரையுலக மோகம், கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி, போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாகக் கட்டமைத்து குழந்தைகளை ஏமாற்றி

குடும்பத்துக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி - போலி வாக்குறுதிகள் அளித்து ஆட்சியைக் கைப்பற்றி அதுவும் ஆட்சி அமைக்கும் வலிமையைப் பெறமுடியாத மைனாரிட்டி நிலைமை என்பதால் தி.மு.க. கூட்டணியில் வென்றவர்களுக்கு பொறுப்புகளைக் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெற்று அ.தி.மு.க. சார்பில் வென்றவர்களுக்கும் அமைச்சர் பதவி தருவதாக ஏமாற்றி குதிரை பேரம் நடத்தி, வெறும் 35 சதவிகிதம் வாக்குகளைப் பெற்று, முதலமைச்சராகியிருக்கிறார் நடிகர் விஜய்.

இப்பொறுப்புக்கு வந்த பிறகு பொறுப்பை உணர்ந்து செயல்பட்டாரா? என்றால் இல்லை. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. ஒரு சில வாக்குறுதிகளை அரைகுறையாகச் செய்து ஏமாற்றி வருகிறார். திராவிட மாடல் ஆட்சி மூலமாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு

வரப்பட்ட திட்டங்களை நிறுத்தினார். நிறுத்த முடியாத திட்டங்களுக்கு பெயரை மாற்றி, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைச் சிறப்பாகச் செய்து வருகிறார்.

அவரது உரை மூலமாக சட்டமன்றத்தின் மாண்பு - மரபு வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறக்கிறது. படங்களாக அந்த அவையில் நிற்கிறவர்கள் தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்திருப்பார்கள். சில அமைச்சர்கள் சட்டமன்றத்தில் தான் பேசுவது தவறு என்று தெரிந்தே பேசி, 'மீம்ஸ்', 'ரீல்ஸ்'ஐ வெளியிடுகிறார்கள். நேரலை மூலமாக மக்களை சென்றடைந்த பிறகு அதை ஒப்புக்கு அவைக்குறிப்பில் இருந்து நீக்கிக் கொள்கிறார்கள். இப்படியாக தந்திர மேடையாக சட்டசபையை த.வெ.க. அரசு பயன்படுத்துகிறது.

ஆட்சியின் தோல்விகளுக்கு பதில்சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்றமனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார். இவரது இப்பேச்சைக் கண்டிக்கும் வகையில், தி.மு.க. சார்பில் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் வருகிற 12.09.2026 சனிக்கிழமை அன்று சரியாக காலை 9 மணியளவில் சைதாப் பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை தெற்கு - சென்னை தென் கிழக்கு, சென்னை மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளில் உள்ள நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பி கண்டனங்களை பதிவு செய்திடுவோம் வாரீர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் சென்னை தெற்கு - தென்கிழக்கு - சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இதுவரை ரூ.6 கோடியே 55 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 55 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-09-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	எம். கதிரேசன், அ.நா. மங்கலம், அஞ்சல், காரிப்பட்டி, சேலம் மாவட்டம்.	25,000/––
2.	ரா.ராஜேந்திரன், விளந்தை, ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம்.	25,000/–
3.	ஜே. பத்மநாதன், ரங்கநாதபுரம், கிருஷ்ணராயபுரம், கரூர் மாவட்டம்.	25,000/–
4.	மு.மோகன், அன்னை சத்யா நகர், ஆலாம்பாளையம் பேரூர், நாமக்கல்	25,000/–
5.	ஆர்.தங்கவேல், பையர்நாயக்கன்பட்டி அஞ்சல், அரூர், தருமபுரி மாவட்டம்.	25,000/–
6.	எம். கிருஷ்ணன், வீரன்வட்டம் கிராமம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்.	25,000/–
7.	திருமதி ஆர்.சரண்யா, நேரு நகர் கிழக்கு, விமானநிலையம் அஞ்சல், கோவை	25,000/–
8.	க.கா.சுப்பிரமணியம், கரட்டுப்பாளையம் அஞ்சல், நம்பியூர் வட்டம், ஈரோடு	25,000/–
	மொத்தம்	**ரூ.2,00,000/-**

முதலமைச்சர் விஜய்யின் ஆணவ – அவதூறு பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து

காஞ்சிபுரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிக்கை

காஞ்சிபுரம், செப்.11, சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் ஆணவமாக, அவதூறாக பேசிய பேச்சுக்கு கண்டனம் தெரிவித்தும், உடனடியாக மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை காஞ்சிரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெறுகின்றது. இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத்தினர், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

சட்டமன்றத்தில் காவல் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தின் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய உண்மையான, ஆணித்தரமான கேள்விகளுக்கு முதலமைச்சர் விஜய் பதிலளிக்காமல், தான்தோன்றித்தனமாக தேவையில்லாத வகையில், 45 ஆண்டுகளுக்கு முன்பு, 50 ஆண்டுகளுக்கு முன்பு சம்பங்களை சொல்லியும், உடல்மொழி காட்டியும் பேசியது கேட்டு தமிழகமே வெட்கித் தலைகுனிந்தது.

அதுமட்டுமல்லாமல், முதலமைச்சரின் பேச்சுக்கு

த.வெ.க. கூட்டணியில் உள்ள மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகள், ஆன்றோர் சமூக ஆர்வலர்கள் என்று பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் தினந்தோறும் கொலை கொள்ள, போதை கலாச்சாரம் என்று சீரழிந்து வரும் இளைஞர்களை திசை திருப்பும் வகையில் முதலமைச்சர் விஜய் தனது சினிமா டயலாக் சூட்டிங் ஸ்பாட்டாக தமிழ் நாடு சட்டமன்றத்தை மாற்றிவிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை இந்த நாட்டை ஆண்ட முத் தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், இந்தியாவில் புகழை தோகா மாநாட்டில் நிலை நாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறன் அவர்களையும், திருமணமான ஐந்தே மாதத்தில், 23 வயதில் மிசா என்னும் கொடிய அவசர நிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச் சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்து தியாகத்தைச் செய்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் விஜய் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்திற்குரியது.

அவரது அணவ,அவதூறு பேச்சு மூலமாக சட்டமன்றத்தின் மாண்பு, மரபு, வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள கொச்சையான பேச்சுக்களை பேசும் தரமன்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறி இருக்கிறார். இவரது இப்பேச்சுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தலைமைக் கழகம் வாருவாய் தலைநகங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தும் படி அறிவுறுத்தியுள்ளது.

அன்படி சட்டமன்றத்தில் ஆணவமாக, அவதூறாக, பொய்யாக பேசிய முதலமைச்சர் விஜய்யிக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும், அவரது தரமற்ற பேச்சை உடனடியாக திரும்பப் பெற வலியுறுதியும், அவ்வாறு பேசியதற்கு உடனடியாக மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் எனது (மாவட்டச் செயலாளர் க.சுந்தர்) தலைமையில், காஞ்சிபுரம் காவலன் கேட், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நாளை (12.9.2026-சனிக்கிழமை) காலை 10 மணிய எவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது.

எனவே இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மாவட்டப்பிரதிநிதிகள், வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் கழக முன்னணித் தோழர்கள் பெருந்திரளாக நாளை காலை 9 மணிக்கே காஞ்சிபுரம் காவலன் கேட் - மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் திரண்டு, முதலமைச்சர் விஜய்யின் அணவ- அவதூறு பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து, கண்டன முழக்கமிட ஆயிரக்கணக்கில் அணிதிரள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.